பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 03 சனிக்கிழமை 18.12.2021 கதிர் 271

## புதையல் தோண்டிய 9 பேர் சிக்கினார்கள்

கண்டி, உடதும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தேகம பிரதேசத்தில், புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 9 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளமையுடன் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தியப் பொருள்களையும் கைப்பற்றியுள்ள 2

# தமிழரின் தாயகத்தில் சீனாவின் செல்வாக்கு வேண்டவே வேண்டாம்

## சுமந்திரன் திட்டவட்டம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர்18

சீனர்களின் செல்வாக்கை வடக்கு, கிழக்கில் – தமிழர் தாயகத்தில் – நிலைபெறுவதை நாம் விரும்பவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவித்தார்.

இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் 2

## 'மொட்டு' அரசைப் பலவீனப்படுத்தும் நோக்கம் பங்காளிகளுக்கு இல்லை!

### இப்படிச் சொல்கின்றார் வாசுதேவ



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசைப் பலவீனப்படுத்தும் நோக்கம் பங்காளிக் கட்சிகளுக்குக் கிடையாது. ஆனால், அதற்காகத் தவறான தீர்மானங்களுக்குத் துணைபோகவும் முடியாது என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

யுகதனவி மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க 2

## எஸ்.ரி.எவ். சுற்றிவளைப்பு; 11 பேர் வசமாக மாட்டினர்!

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 7 மதுபான சுற்றிவளைப்புகளில் எழுவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் 100.5 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது 5 லீற்றர் கோடா, இரண்டு செப்புத் தகடுகள், 1 மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கேகாலை, திம்புல்கமுவ பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி லொறியொன்றில் ஒரு தொகை மரக்குற்றி 2



## 30,000 ஆசிரியர் பற்றாக்குறை!

நாடளாவிய ரீதியில் அரச பாடசாலைகளில் 30 ஆயிரம் ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடம் நிலவுகின்றது 2

## கப்பலில் இருந்த எரிவாயுவில் பிரச்சினை எதுவும் இல்லை!

### நாட்டில் விநியோகிக்க அனுமதி

இலங்கைக்குக் கப்பலில் கொண்டுவரப்பட்ட எரிவாயுவின் தரம் குறித்த கேள்விகள் எழுப்பப்பட்டு வந்த நிலையில், குறித்த கப்பலில் உள்ள எரிவாயு நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எரிவாயு கொண்டுவந்த இரண்டு கப்பல்கள் விநியோகத்தில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், ஒரு கப்பலை நேற்று தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் 2

## கந்தர்மடத்தில் தீ விபத்து; வீடொன்று பாரிய சேதம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கந்தர்மடம் மணல்தறை லேன் பகுதியில் இன்று அதிகாலை வேளையில் ஏற்பட்ட தீ விபத்தால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. 2



## தொட்டில் கயிறு கழுத்தில் சிக்கி 4 வயதுக் குழந்தை பரிதாபச் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் தொட்டில் கயிறு கழுத்தில் இறுகி நான்கு வயது பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை தொட்டிலில் விளையாடிக்கொண்டிருந்தபோது தவறுதலாக அதன் கயிறு கழுத்தில் இறுகியதில் குறித்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து, குழந்தை உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக் 2

## புதுக்குடியிருப்பில் காணாமல்போன சிறுமி மூன்று நாள்களின் பின்னர் சடலமாக மீட்பு!

### வன்புணர்ந்து படுகொலை எனச் சந்தேகம்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பில் காணாமல் போன சிறுமி, மூன்று நாள்களின் பின்னர் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூங்கிலாறு வடக்கு, உடையார்கட்டைச் சேர்ந்த யோகராசா நிதர்சனா (வயது-13) எனும் சிறுமியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி தனது கல்வி நடவடிக்கைக்காக திருகோணமலையில் விடுதியொன்றில் தங்கி கற்று வருகின்றார். 2

## புதையல் தோண்டிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உடதும்பர, நாவுல்ல, பன்வில, திகண, உருவெல மற்றும் ஹசலக்க ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 முதல் 48 வரையான வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கந்தேகம பிரதேசத்திலுள்ள விகாரையொன்றுக்குச் சொந்தமான இடத்தில் புதையல் தோண்டும் செயற்பாட்டில் சந்தேகநபர்கள் ஈடுபட்டபோதே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தமிழரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தாடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சிதைந்து போகிற தமிழ் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும் எனும் தலைப்பில் இந்தக் கருத்தாய்வு நிகழ்வு இடம்பெற்றது

வி.எஸ்.சிவகரனின் நெறியாள்கையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் மக்கள் கூட்டணியின் அருந்தவபாலன் ஆகியோரும் ஊடகவியலாளர் என்.வித்தியாதரன், அரசியல் ஆய்வாளர்களான போராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், நிலாந்தன், சமூகச் செயற்பாட்டாளர் இரேனியஸ் செல்வின் ஆகியோரும் கருத்துக்களை பகிர்ந்து இருந்தனர்.

சீன விவகாரம் தொடர்பில் சுமந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இங்கே சிலர், சீனாவை ஏன் எமக்கு ஆதரவாக சேர்க்கக்கூடாது என்கின்றனர். இதற்கு நான் பகிரங்கமாகவே கூறுகின்றேன். சீனர்களின் செல்வாக்கை வடக்கு, கிழக்கில் நாம் இரு காரணங்களிற்காக விரும்பவில்லை.

அதில் ஒன்று - எமது அரசியல் விடிவிற்காக நாம் செய்யும் போராட்டம் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைக் கோட்பாட்டில் தங்கியுள்ளது. இது இரண்டுமே சீனாவிற்கு தெரியாது என்பதாகும்.

இரண்டாவது - இலங்கை தென் சீனக் கடலில் தீவாக இருந்திருந்தால், சீனாவின் கடலில் இருந்திருந்தால், அது அந்தப் பிராந்தியத்தில் சீனாவின் நியாயமான கரிசனையாக அது இருந்திருக்கும். ஆனால் இலங்கை இந்தியாவுக்கு அருகில் உள்ள ஒரு தீவு. இந்தியாவின் நியாயமான பாதுகாப்பு கரிசனையை நாம் உள் வாங்கியிருக்கின்றோம். அதுவும் இந்தியாவிற்கு மிக அண்மையில் உள்ள பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை நாம் விரும்பவில்லை.

இதைச் சொல்லித்தான் - அப்படி சீனாவின் ஆதிக்கத்தை நாம் இங்கு விரும்பவில்லை என்பதைச் சொல்லித்தான் - சீனர்களின் இந்து சமுத்திரத்தின் ஆதிக்கத்தில் மிகவும் கரிசனை கொண்டுள்ள அமெரிக்காவுடனும் பேசினோம், இந்தியாவுடனும் பேசினோம். அதாவது உலக வல்லரசும், பிராந்திய வல்லரசும் இதனை (சீன ஆதிக்கத்தை) விரும்பவில்லை. இதன்போதே வடக்கு கிழக்கில் சீனா நிலைகொள்ளாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி இரு நாட்டிடமும் உண்டு. அதற்கு நாங்கள் கேட்கின்றோம் அந்த இடத்தில் இருப்பது நாங்கள், எனவே சட்ட அதிகாரம் எங்களிடம் இருந்தால், அது நாங்கள் கேட்கும் வடிவில் கொடுக்கப்படுமாக இருந்தால், எங்கள் நிலம் மீதான சட்ட அதிகாரம் எங்கள் கைகளில் இருக்குமானால், நீங்கள் அந்தப் பயத்தைகொள்ளத் தேவையில்லை என்கின்றோம்.

சட்டம், ஒழுங்குகளங்களுடையகையில் இருக்குமானால், இவை தொடர்பில் அவர்கள் பயம்கொள்ளத் தேவையில்லை என்றோம். அநேகமாக எல்லா நாடும் தமது நலனை முன்னிறுத்தியே செயல்படுவார்கள். அதில் வியப்பில்லை. சிலவேளை ஒரு பிரதேசத்தில் குழப்பம் இருந்தால்தான் அங்கே தமது தலையீட்டை தொடர முடியும் என்ற எண்ணம் கூட அவர்களுக்கு இருக்கலாம். நாம் அது குறித்தும் விளக்கிக் கூறியுள்ளோம். இங்கே தொடர்ச்சியாக குழப்பநிலை இருந்தால், இலங்கை அரசிடமே நில அதிகாரம், பாதுகாப்பு அதிகாரம் எல்லாம் இருக்கப்போகின்றன. அது உங்களிற்கும் சாதகம் இல்லை. இதனைத் தீர்த்து வைத்தால் மட்டுமே உங்களிற்கு சாதகம் என்றோம். தற்போதும் சந்திப்புக்கள் தொடர்கின்றன. இவை படம் எடுத்து முகநூலில் போடும் சந்திப்புகள் அல்ல. அப்படியும் சில இங்கு இடம்பெறுகின்றன. சிலர் செய்கின்றனர். அப்படி அவர்கள் என்ன பேசுகின்றார்கள் என்று தெரியவில்லை.

இதே நேரம் ஜனவரியில் முக்கிய விடயங்கள் இடம்பெறவுள்ளன. அவை இடம்பெறும்போது தெரியும் . - என்றார்.

## 'மொட்டு' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்துக்கு வழங்கும் வகையிலான ஒப்பந்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் சிறந்த தீர்வை வழங்கும் என முழுமையாக எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தலைமையிலான அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாகச் செயற்படுகின்றமை கவலைக்குரியது. கொள்கைக்கு எதிரான தீர்மானங்கள், அரசு தொடர்பில் மக்களின் நிலைப்பாட்டை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியையும், அரசின் கொள்கையையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குண்டு.

யுகதனவி மின்நிலையம் இயற்கை எரிவாயு விநியோகத்தின் ஊடாக செயற்பட வேண்டும் என்பது அவசியமானதாகும்.

இயற்கை எரிவாயு விநியோக நிறுவனத்துக்கும், மின்சாரத்துறை அமைச்சுக்கும் இடையில் சாதாரண ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். அதனை விடுத்து எரிவாயு விநியோகத்தின் உரிமையைப் பிற நாட்டின் தனியார் நிறுவனத்துக்கு ஏகபோகமாக விட்டுக் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அமெரிக்க நிறுவனம் இயற்கை எரிவாயு விநியோகத்தில் ஏகபோக உரிமையைத் தனதாக்குவதன் ஊடாக எதிர்காலத்தில் தோற்றம் பெறும் சவால்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அதன் காரணமாகவே அமைச்சரவையின் மூன்று பிரதான உறுப்பினர்கள் அதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றோம்.

யுகதனவி விவகாரத்துக்கு சமூகத்தின் மத்தியில் பல எதிர்ப்புக்கள் தோற்றம் பெற்றுள்ளன.

கைச்சாத்திடப்பட்டுள்ள யுகதனவி ஒப்பந்தத்துக்கு எதிராக பல தரப்பினர் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

உயர்நீதிமன்றம் சிறந்த தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## எஸ்.ரி.எவ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பூகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரிமுல்ல பிரதேசத்தில், அனுமதிப்பத்திரமின்றி களனி கங்கையில் மணல் அகழ்ந்து அதனை லொறியில் ஏற்றிக்கொண்டிருந்த இருவரைப் பூகொட பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பூகொட பிரதேசத்தைச் சேர்ந்த 39, 44 வயதுகளையுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது டிப்பர் ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மீரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கத்தியைக் காட்டி வழிபறிப் கொள்ளையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் வெயாங்கொட மாளிகாதென்ன பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேகநபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் 3 தொலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. வெயாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

## 30,000 ஆசிரியர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் உள்ளிட்ட பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கப்பலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான குழு பரிசோதித்து, விநியோகத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை தரக் கட்டுப்பாட்டு சபை அனுமதி வழங்கும் சமையல் எரிவாயுவை மாத்திரம் நாட்டில் விநியோகிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது.

## கந்தர்மடத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கை 43/2 இலக்க வீட்டில் அதிகாலை ஒரு







மணியளவில் வீட்டில் திடீர் தீ பரவியுள்ளது. வீட்டில் ஐவர் இருந்த வேளை வெடிப்புச் சத்தங்கள் கேட்டபோதே வீட்டார் எழுந்து பார்த்தபோது பெரும் நெருப்பு எரிந்துள்ளது. இதன்போது முதியவர் படுத்துறங்கிய அறையின் ஊடாகவே தீ பரவல் ஏற்பட்டதால் முதியவரைப் பாதுகாப்பாக வெளியேற்றிய வீட்டார் பின்பு மின்சாரத்தைத் துண்டித்துள்ளனர்.

இவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டு 1.30 மணியளவில் மாநகர சபையின் தீ அணைப்புப் பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டு வீட்டார் பெரும் முயற்சியின் மத்தியில் அயலவர்களின் உதவியுடன் தீயை அணைத்தனர். இருந்தபோதும் வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி, அலுமாரிகள், புத்தகங்கள், கதிரைகள், மெத்தைகள், கட்டில்கள் எனப் பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து அழிவடைந்துள்ளன.

இவ்வாறு ஏற்பட்ட தீயின் காரணமாக வீட்டின் சுவர்களில் பெரும் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதால் வீட்டுக்கும் பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது. இதேநேரம் தீப் பரவலுக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## புதுக்குடியிருப்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்நிலையில் கடந்த 13ஆம் திகதி தனது வீட்டுக்கு வந்துள்ளார். 15ஆம் திகதி திடீரெனக் காணாமல்போயுள்ளார்.

சிறுமி காணாமல்போனமை தொடர்பில் குடும்பத்தினரால் அன்றைய தினமே புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சிறுமியின் வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டாரின் கோழிகள் காணாமல்போன நிலையில் அவற்றை இன்று தேடிச் சென்றபோது, சிறுமியின் வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் குறித்த சிறுமி ஆடைகளையப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டமையை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த சிறுமி வன்புணர்ந்து படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## தொட்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகச் சேர்க்கப்பட்டது.

எனினும், சிகிச்சை பலனின்றி இன்று குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் பரமேஸ்வரன் அருட்சிகா என்ற நான்கு வயது குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)


**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சிகிச்சை வெற்றி; ஆள் அவுட்!

**காலத்தே பயிர் செய்ய வேண்டும். காலம் பிழைத்தால் பயிர்ச்செய்கை பொய்த்துவிடும். இது எல்லா விடயங்களுக்கும் பொருந்தும்.**

**'சத்திரசிகிச்சை வெற்றி; ஆனால் நோயாளி அவுட்!' – என்று ஓர் ஆங்கிலப் பேச்சு மொழி நம்மத்தியில் உண்டு.**

**தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்துக்கான தீர்வு விடயமும் இப்படித்தான் முடியும் போல.**

**இன்று யாழ்ப்பாணத்தில் தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் 'சிதைந்து போகிற தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தமிழ்த் தலைமைகளும்' என்னும் தலைப்பில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய சமூக செயற்பாட்டாளர் ம.இரேனியஸ் செல்வின் ஒரு தகவலை வெளியிட்டார்.**

**புதுடில்லியின் சிந்தனைக் கூடத்தைச் சேர்ந்த ஒரு புத்திஜீவி இலங்கை வந்து நிலைமைகளைக் கண்டறிந்து பின்னர் தம்முடன் பேசினார் என்றார் செல்வின்.**

**"உங்களுக்கு நீங்கள் கேட்கும் சமஷ்டித் தீர்வு நிச்சயம் கிடைக்கும். ஆனால் அது இப்போதல்ல. உங்கள் வடக்கு – கிழக்கு தாயகத்தில் நாற்பது வீதமான பரிமாணத்துக்கு தென்னிலங்கை மக்களைக் குடியேற்றிய பின்னர் – அந்தக் குடியேற்றப் பணி வெற்றிகரமாக பூர்த்தியான பின்னர் – கொழும்பு தானாகவே முன்வந்து உங்களுக்கு சமஷ்டித் தீர்வைத் தரும்" – என்று புதுடில்லி சிந்தனைக் கூடச் சிற்பி கருத்து வெளியிட்டார் என்கிறார் செல்வின்.**

**அதுதான் நடக்கின்றது. ஒருபுறம் தீர்வுக்கான முயற்சிகள் நடக்கின்றன எனப் படம் காட்டியபடி விடயங்கள் – விவகாரங்கள் – இழுத்தடிக்கப்படுகின்றன.**

**அதேநேரம் தமிழர் தாயகம் எங்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் வல்வந்தமாக – முழுமுனைப்புடன் – முன்னெடுக்கப்படுகின்றன.**

**தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் இராணுவமயப்படுத்தப்பட்டு இரும்புப் பிடிக்குள் அது அடைக்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி நாட்டின் பிறபகுதியினர் அங்கு கொஞ்சம் கொஞ்சமாகத் திட்டமிடப்பட்ட முறையில் குடியேற்றப்படுகின்றனர்.**

**யுத்தம் முடிந்த பின்னர் கடந்த பன்னிரண்டு வருடங்களாக இதுதான் – இது மட்டும்தான் – நடந்து வருகின்றது.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை தொடர்பில் உண்மைகளைக் கண்டறிதல், நீதியை நிலைநாட்டுதல், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், நஷ்ட ஈடுகளை வழங்குதல், நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தல், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்று பலப் பல விடயங்களையும் கூறிக் கூறியே காலத்தை இழுத்தடிக்கின்றனர். அதேசமயம் தடுப்பார் கேட்பாரின்றி தமிழர் தாயகத்தின் குடிசனப் பரம்பல் முறைமையையே தலைகீழாக்கும் விதத்திலான திட்டமிட்ட குடியேற்றங்கள் மட்டும் தாராளமாக நடந்து கொண்டிருக்கின்றன.**

**தமிழர்கள் தங்களது பூர்வீகத் தாயகம் என உரிமை கோரும் வடக்குக் கிழக்கின் குடிசனப் பரம்பல் முறைமையை திட்டமிட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட குடியேற்றங்கள் மூலம் தலைகீழாக்கி, தமிழர் தாயகத்தின் தனித்துவத்தை சிதைத்தழித்தால் அதன் பின்னர் தாயக உரிமைகள், அதிகாரப் பரவலாக்கல் போன்ற கருத்தியல்களும், வலியுறுத்தல்களும், கோட்பாடுகளும் நின்று பிடிக்கா என்று கொழும்பு கணக்கிடுகின்றது.**

**தீர்வைப் பெற்றுத் தருகிறோம், நியாயத்தை நிலைநாட்டுகின்றோம் என்றெல்லாம் படம் காட்டும் இந்தியாவும், மேற்குலக நாடுகளும் இந்த யதார்த்தப் புறநிலையை உணர்ந்து கொள்ளாமல், காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் தமிழர் தாயக உரிமைகளைச் சிதைக்கத் திட்டமிடும் கொழும்புக்கு உதவ முயலுகின்றன.**

**தமிழருக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் இந்த நாடுகளுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் தீர்வு கிட்டும் வரை தமிழர் தாயகத்தில் சிங்கள, பௌத்த பேரினவாத அரசுகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏதோ ஒரு வகையில் தடுத்து நிறுத்த முயல வேண்டும்.**

# மாணவர்கள் மீது ஆசிரியர்களின் துன்புறுத்தல் யாழில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மீதான ஆசிரியர்களின் துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன என சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கடந்த ஒரு வாரத்துக்குள் இரண்டு துன்புறுத்தல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும், அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் தரம் 7 இல் பயிலும் மாணவனை கடந்த 9 ஆம் திகதி வகுப்பாசிரியர் தாக்கியதில் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாணவன் காது மற்றும் உடல் ரீதியான தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டார் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவன் மீதான தாக்குதல் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரின் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேவேளை, வடமராட்சி புற்றளை மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் பயிலும் மாணவனை சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் 200 தடவைகள் தோப்புக்கரணம் செய்யுமாறு தண்டனையளித்துள்ளார்.

அதனால் உள, உடல் ரீதியாக மாணவன் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பெற்றோர் பாடசாலைக்குச் சென்ற போது மாணவனை தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்கு உட்படுத்துமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

அவருக்கான சிகிச்சைக்கு எவ்வளவு செலவானாலும் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதிகளவு தடவை தோப்புக்கரணம் செய்யவைப்பது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு உயிரைப் பறிக்கும் வகையிலான சித்திரவதை என மருத்துவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.

இதேவேளை காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் அண்மையில் மாணவன் ஒருவரைத் தாக்கிய சம்பவம் பொலிஸாரின் தலையீட்டால் இணக்கத்துடன் முடித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சியல்கோட் படுகொலை மேலும் 33 பேர் கைது!

பாகிஸ்தான் சியல்கோட்டில் இலங்கையர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 33 சந்தேக நபர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர் என சியல்கோட் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட 33 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு குஜ்ரன்வாலா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேநேரம், இந்த வழக்கு தொடர்பாக இதுவரை 85 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என புலனாய்வாளர் தாரிக் மஹ்மூத் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் ரசண்டி டெக்ஸ்டைல் என்ற ஆடைத் தொழிற்சாலையில், இலங்கைப் பிரஜை பிரியந்த குமார கைத்தொழில் பொறியியல் முகாமையாளராகப் பணியில் இணைந்துள்ளார்.

அதன் பின்னர் 2012 இல் சியல்கோட்டில் உள்ள ராஜ்கோ என்ற தொழிற்சாலையில் பொது முகாமையாளராகப் பணியில் இணைந்துள்ளார்.

இதன்போது, தமது தொழிற்சாலையில் ஒட்டப்பட்டிருந்த மதசார் பதாகை ஒன்றை அவர் அகற்றினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இஸ்லாம் மதத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு, இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் அவர் எரித்துகொலைசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நீர்வழங்கல் வசதிகள் தொடர்பாக வவுனியாவில் மீளாய்வுக் கூட்டம்

வன்னி மாவட்டங்களின் நீர்வழங்கல் வசதிகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், வவுனியா மாவட்டசெயலக வளாகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் முதன்மை அதிதியாக நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கலந்துகொண்டார்.

கலந்துரையாடலில் வன்னி மாவட்டங்களின் நீர்வழங்கல் திட்டத்தின் முன்னேற்ற நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் செயற்ப்படுத்தப்படவிருக்கும் சுகாதார மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மூன்று மாவட்டங்களிலும் நீர்வழங்கலில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.காதர்மஸ்தான், கு.திலீபன், ரிஷாத் பதியுதீன், சாள்ஸ் நிர்மல நாதன் மற்றும் அமைச்சரின் இணைப் பாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக் களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பிலிப்பைன்ஸை தாக்கியது சூறாவளி

## மக்கள் முகாம்களில் தஞ்சம்!



இந்த ஆண்டு பிலிப்பைன்ஸைத் தாக்கிய மிக சக்திவாய்ந்த வெப்பமண்டல புயல்களில் ஒன்றான உள்ளூரில் ஓடெட் என்று அழைக்கப்படும் சுப்பர் சூறாவளி ராய், தென்கிழக்கு ஆசிய நாட்டின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளை தாக்கிய பின்னர் பலவீனமடைந்துள்ளது.

இப் புயலினால், இதுவரை ஒரு மரணம் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன், ஆயிரக்கணக்கான மக்கள் நிவாரண முகாம்களில் தஞ்சமடைய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்த ஆண்டு பிலிப்பைன்ஸைத் தாக்கும் 15ஆவது சூறாவளியான ராய், கனமழை மற்றும் பரவலான வெள்ளத்தைக் கொண்டு வந்தது.

இதனால், டசின் கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. மேலும் பல துறைமுகங்களில் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

இதனால் 4,000 பயணிகள், ஓட்டுநர்கள் மற்றும் சரக்கு உதவியாளர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

அத்துடன், புயல் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வெகுஜன தடுப்பூசி செலுத்தும் பணிகளை பிலிப்பைன்ஸ் ஒத்திவைத்தது.

மத்தியகிழக்குக்கடற்கரையில் உள்ள பிரபலமான சுற்றுலா மற்றும் சர்பிங் தலமான சியார்காவ் தீவில்வியாழக்கிழமைகரையைக் கடந்த பிறகு, 5ஆவது வகையிலிருந்து 3ஆவது வகை புயலாக சற்று வலுவிழந்தது. இது இன்று பிற்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் மணிக்கு 260 கிலோமீற்றர் (மணிக்கு 160 மைல்) வேகத்தில் வீசிய புயல், மணிக்கு 300 கிலோமீற்றர் (மணிக்கு 185 மைல்) வேகத்துடன் மேற்கு நோக்கி நகர்ந்து.

மற்ற பாதிக்கப்பட்ட பகுதிகளில் சூரிகாவோ டெல் நோர்டே மாகாணம் மற்றும் சூரிகாவோ டெல் சுரின் சில பகுதிகளும் அடங்கும் என்று பிலிப்பைன்ஸின் தேசிய கிரிட் கார்ப்பரேன் தெரிவித்துள்ளது. போஹோல் மாகாணம் மற்றும் அகுசன் டெல் சுரின் சில பகுதிகளும் புயலால் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை பிலிப்பைன்ஸின் பல பகுதிகளில் தகவல் தொடர்பு மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது, இது மீட்பு முயற்சிகளை கடினமாக்கியது. செயலிழப்பு காரணமாக ஏற்பட்ட சேதத்தின் அளவை அதிகாரிகளால் தீர்மானிக்க முடியவில்லை.

ராய் சூறாவளி, வியட்நாம் மற்றும் சீனாவின் ஹைனான் மாகாணத்தில்ஓரளவுமழையைப் பரப்பும், ஆனால் இதன் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை அதிகாரிகளின் கூற்றுப்படி, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 20 சூறாவளிகள் தீவுக்கூட்டத்தைத் தாக்குகின்றன.

# அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள தயாராகின்றது ரஷ்யா



அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்புடன் பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இது தொடர்பான வரைவு ஆவணம் அமெரிக்க அரசிடம் சமாப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் மேற்கொண்டு உடனடியாகப் பேச்சு நடத்துவதற்காக சிரேஷ்ட தூதரக அதிகாரி ஒருவர் அமெரிக்கா செல்லத் தயாராக உள்ளார் என ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள சூழலில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொள்ள தயாராக இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

முன்னாள் சோவியத் யூனியன் நாடான உக்ரைன் ரஷ்யாவின் எல்லையையொட்டி அமைந்துள்ளது. சுமார் 30 வீதத்தினர் அங்கு ரஷ்ய மொழி பேசுவோராக உள்ளனர். இந்நாட்டில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு அதிகரிப்பது தனது பாதுகாப்புக்கு ஆபத்து என ரஷ்யா கருதுகிறது.

கடந்த 2013-ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஆதரவு பெற்ற அப்போதைய உக்ரைன் ஜனாதிபதி விக்டா யானுகோவிச்சை எதிர்த்து ஐரோப்பிய யூனியன் ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினா மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனா. இதனால் மாபெரும் அரசியல் குழப்பம் ஏற்பட்ட நிலையில் யானுகோவிச் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார்.

அதனைத் தொடாந்து ஐரோப்பிய ஆதரவாளர்களால் புதிய அரசு அமைக்கப்பட்டது. அந்த அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனா.

ரஷ்ய இராணுவ உதவியுடன் அவர்கள் கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க் லுஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றினர்.

அப்போது உக்ரைனின் அங்கமாக இருந்த கிரீமியா மீது படையெடுத்த ரஷ்யா, அந்த தீபகற்பத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இந்தச் சூழலில், உக்ரைன் எல்லையருகே ஏராளமான படையினரை ரஷ்யா குவித்து வருகிறது. உக்ரைன் மீது படையெடுத்து கிரீமியாவைப் போலவே அந்த நாட்டையும் தன்னுடன் இணைத்துக்கொள்ள ரஷ்யா திட்டமிட்டு வருவதாக அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கூறி வருகின்றன.

உக்ரைனை ஆக்கிரமிப்பதற்காக 1.75 லட்சம் படையினரை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டு வருவதாகவும் ஏற்கெனவே 1 லட்சம் ரஷ்யப் படையினா உக்ரைன் எல்லைப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர் இந்தக் குற்றச்சாட்டுகளை ரஷ்யா மறுத்து வருகிறது.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தால் அந்த நாட்டுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன கூறி வருகின்றன. இதனால் இருதரப்புக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் விளாடிமிர் புடினுக்கும் இடையே மெய்நிகர் வழி பேச்சு கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது.

பாதுகாப்பு தொடர்பாக நடைபெற்ற அந்தப் பேச்சு குறிப்பிடத்தக்க முடிவுகள் எதுவும் எடுக்கப்படாமல் நிறைவடைந்தது.

இந்தச் சூழலிலேயே அமெரிக்கா மற்றும் நேட்டோவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான ஆவணங்களை சமாப்பித்துள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது



# தென்னாபிரிக்க நாட்டின் முன்னாள் அதிபருக்கு சிறை

ஊழல் வழக்கில் சிறைத்தண்டனை பெற்ற தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் ஜேக்கப் சூமாவின் பிணையை நீதிமன்றம் ரத்து செய்திருக்கிறது.

சிறைக்கு வெளியில் இருந்த காலத்தை, அவருக்கு விதிக்கப்பட்ட 15 மாத தண்டனைக் காலத்தில் இருந்து கழிக்கக்கூடாது என்றும் பிரிட்டோரியா நீதிமன்றம் கூறியுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்கு ஆஜராகாததால் ஜுமாவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஜுலையில் அவர் சரணடைந்தார்.

79 வயதான அவர், மருத்துவக் காரணங்களுக்காக கடந்த செப்டம்பர் 5ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். இப்போது பிணையில் ரத்து செய்யப்பட்டிருப்பதால் அவர் மீண்டும் சிறைக்குச் செல்ல வேண்டும்.



# நாட்டு மாடுகளுக்கு மட்டுமே ஜல்லிக்கட்டில் அனுமதி

## தமிழக அமைச்சர் மூர்த்தி உறுதிபடத் தெரிவிப்பு

மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வீரபாண்டி ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு கால் நடை பராமரிப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. குறித்த முகாமில், அமைச்சர் பி.மூர்த்தி கலந்துகொண்டு தொடக்கி வைத்தார் ஆட்சியர் அனிஷ்சேகர் தலைமை தாங்கினார்.

பின்னர் அமைச்சர் பி.மூர்த்தி நிருபர்களின கேள்விகளுக்குப் பதிலளித்தார். அப்போது, ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் நாட்டு மாடு களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்படும் எனவும், இந்தாண்டு அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் ஜல்லிகட்டு நிகழ்ச்சியில் நாட்டு இன மாடுகள் மட்டுமே கலந்து கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

கலப்பின மாடுகளைக் கொண்டு வருவோருக்கு போட்டிகளில் பங்குபெற அனுமதி வழங்கப்படாது எனவும், தி.மு.க. ஆட்சியில்தான் ஜல்லிகட்டு முறையாக நடத்த அனுமதி பெற்றுத்தரப்பட்டதென்றும், நாட்டு மாடுகள் இனத்தைக் காப்பாற்றுவதற்காகவே தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த கால ஆட்சியைப்போல் இல்லாமல், முறையாக ஜல் லிக்கட்டை நடத்துவோம் என்றும், நாட்டு மாடு இனங்களை அபிவிருத்தி செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் உறுதி அறிவித்தார்.

# தொடர் அமளியால் 20 ஆம் திகதி வரை மாநிலங்களவை ஒத்திவைக்கப்பட்டது

இந்திய நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடர் கடந்த மாதம் 29 ஆம் திகதி தொடங்கி, டிசெம்பர் 23 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. கூட்டத்தொடர் தொடங்கியது முதல், மக்களவையிலும் மாநிலங்களவை யிலும் பல்வேறு விவகாரங்களைக் கொண்டு எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டுவருகின் றனர். இதனால், விவாதங்கள் நடைபெறாமல் அடிக்கடி சபைகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின் றன.



இந்தநிலையில், நேற்றைய மாநிலங்கள வையில் கூட்டம் ஆரம்பித்தது முதல் 12 எம். பிக்கள் இடைநிறுத்தல் விவகாரம், லக்கிம்பூர் விவகாரம் உள்ளிட்டவை தொடர்பாக எதிர்க் கட்சியினர் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர்.

மாநிலங்களவை வழக்கம்போல் செயல் படத் தயவு செய்து ஒருமித்த கருத்துக்கு வரவேண்டுமெனவும், இரு தரப்பினரும் நேருக்கு நேர் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது அவசியமெனவும் தெரிவித்த மாநிலங்களவைத் தலைவர் வெங்கையாநாயுடு, அதற்கு உதவும்வகையில் திங்கட்கிழமை வரை அவையை ஒத்தி வைத்தார்.



# நான்கு நாடுகளின் செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்ப இஸ்ரோ ஒப்பந்தம்

*2021 முதல் 2023 வரையயான காலகட்டங்களில் நான்கு நாடுகளின் செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்ப இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் ஒப்பந்தம் செய்துள்ளதாக இந்திய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், பிரதமர் அலுவலக இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

*இதற்காக 6 ஒப்பந்தங்களில் இஸ்ரோ கையெழுத்திட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாகப் பதிலளித்த மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், 2021 - 2023 வரையிலான காலகட்டங்களில் வெளிநாட்டு செயற்கைக்கோள்களை விண்ணிற்கு அனுப்ப இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் 4 நாடுகளுடன் 6 ஒப்பந்தங் களில் கையெழுத்திட்டுள்ளது. வணிக ரீதியில் வெளிநாட்டு செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவுவதன் மூலம் 13.2 கோடி யூரோ வருமானம் இந்திய அரசுக்குக் கிடைக்கும்.*

*இந்திய விண்வெளித் துறையின் கீழ் இயங்கும் இஸ்ரோவின் வணிகப் பிரிவான நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட், வணிகரீதியில் வெளிநாட்டு செயற்கைக்கோள்களை பி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் அனுப்பி வருகிறது. 1999 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 34 நாடுகளின் 342 செயற்கைக்கோள்கள் பி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் வணிக ரீதியில் ஏவப்பட்டுள்ளன.*

*மாணவர்கள் தயாரித்த 12 செயற்கைக்கோள்கள் உள்பட 124 உள்நாட்டு செயற்கைக்கோள்கள் புவிச் சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.*

*இந்திய ரொக்கெட்டுகள் மூலமாக வெளிநாட்டு செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதன் மூலம், 2019 - 2021 வரையிலான 3 ஆண்டுகளில் இந்திய அரசு, அந்நிய செலாவணியாக 3.5 கோடி அமெரிக்க டொலர் மற்றும் 1 கோடி யூரோவை வருமானமாகப் பெற்றுள்ளது.*

*இந்தியாவிண்ணுக்குஅனுப்பியுள்ள வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் புவி கண்காணிப்பு, அறிவியல் மற்றும் தொழிநுட்ப சோதனைகளுக்காகப் பயன்பட்டு வருகின்றன என அமைச் சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*




# இங்கிலாந்திலிருந்து கோவா சென்ற மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது

உருமாறிய கொரோனா வைரஸான ஒமிக்ரோன் இங் கிலாந்தில் வேகமாகப் பரவிவரும் நிலையில் அந்த நாட்டில் இருந்து நேற்று கோவா மாநிலத்துக்கு வந்த விமானப் பயணிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப் பட்டபோது, மூவருக்கு கொரோ னாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களின் மாதிரிகள் பரி சோதனைக்காக அனுப்பப்பட்டுள் ளன. பரிசோதனை முடிவில்தான் அவர்களுக்கு ஒமிக்ரோன் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா, என்பது தெரியவரும். குறித்த மூன்று பயணிகளும் லண்டன் கீத்ரோ விமான நிலையத்தில் இருந்து கோவா வந்தவர்கள் என்று அதி காரிகள் தெரிவித்தனர்.

# அக்கரைப்பற்றில் நீதிவான் வீட்டில் இன்று கொள்ளை

அம்பாறை, அக்கரைப்பற்றில் நீதிவான் ஒருவரின் வீட்டில் புகுந்த கொள்ளையர்களைபிடிக்கமுற்பட்ட நீதிவானை தாக்கிவிட்டு அவரின் மனைவியின் 11 பவுண் தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடிய சம்பவம் இன்று சனிக் கிழமை அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக அக்கரைப் பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவானாக கடமையாற்றிவரும் அக்கரைப்பற்று வை.எம்.சி. வீதியில் உள்ள அவரின் வீட்டில் உறக்கத்தில் இருந்தபோது சம்பவ தினமான இன்று அதிகாலை 3 மணியளவில் உள்சென்ற இரு கொள்ளையர்கள் அவரது மனைவியின் தாலிக்கொடியை அறுத்தபோது சத்தம் கேட்டு உடன் எழுந்த நீதிவான் கொள்ளையர்களை பிடிக்க முற்பட்டபோது கொள்ளையர்கள் தாக்கியதில் நீதிவான் காயமடைந்ததையடுத்து கொள்ளையர்கள் தாலிக்கொடியுடன் தப்பி ஓடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப் பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை இந்த பகுதியில் கடந்த வாரம் இரு வீடுகளில் உறக்கத்தில் இருந்த இரு பெண்களின் தாலிக்கொடிகளை கொள்ளையிட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளதுடன் இதுவரை கொள்ளையர்கள் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பில்

# இரு ஊடகவியலாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணி தொடர்பாக செய்தி சேகரிக்கச்சென்ற இரண்டு ஊடகவியலாளர்களுக்கு எதிராக பொத்துவில் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள், அரசியல் கட்சி அங்கத்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் உறுப்பினர்கள் என 32 பேருக்கு பொத்துவில் நீதிவான் நீதிமன்றில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2021, பெப்ரவரி 03ஆம் திகதி பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டமைக்கு எதிராகவே இந்த இரண்டு வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு அது நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பொத்துவில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு மற்றும் திருக்கோயில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு என இரண்டு வழக்குகளுமே பொத்துவில் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சுதந்திர ஊடகவியலாளரும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளருமான செ.நிலாந்தன் மற்றும் இணைய ஊடகவியலாளர் சயனோலிபவனை ரூபா ஐந்து லட்சம் சுய பிணை வழங்கி விடுதலை செய்ததோடு, வழக்கை எதிர்வரும் 2022, மார்ச் 02ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

# வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு

2021ஆம் ஆண்டில் இரண்டு லட்சம் சமுர்த்தி குடும்பங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலாளர் எம்.சி.எம். ரஷ்ஷான் தலைமையில் இடம்பெற்றது.

சமுர்த்தி அருணலு – வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக இரண்டு லட்சம் சமுர்த்தி குடும்பங்களை மேம்படுத்தும் நோக்கில் 12 பிரதேச செயலக பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவ்வுதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின்பால் நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக குறித்த வேலைத்திட்டத்தின் ஊடாக வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் பண்ணை வளர்ப்புக்குத் தேவையான மாடு, ஆடு, கோழி என்பனவும், வாழ்வாதார உபகரணங்கள், வங்கிக் கடன்கள், விவசாய உதவிகள் உள்ளிட்ட இயற்கை பசளை நடைமுறை உள்ளீடுகள் போன்ற உதவித் திட்டங்கள் சமுர்த்தி வங்கிகள் மற்றும் பிரதேச செயலகங்கள் ரீதியாக வழங்கி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், கணக்காளர் றிம்ஷியா அர்சாட், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிருவாக உத்தியோகத்தர் எச்.பி. எந்திரசிறி யரட்ன, சமுர்த்தி திட்ட முகாமையாளர் பிரியந்தி வேரகொட, சமுர்த்தி வங்கி முகாமையாளர் டி. எழிழவன், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.ஆஹிர், திட்ட உதவியாளர் எம்.ஐ.எம். மக்பூல், பிரிவுகளுக்கு பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.






# பாழடைந்த மருத்துவமனையை சீராக்கித் தருமாறு கோரிக்கை

திருகோணமலை – கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மஜீத் நகர் கிராம மக்கள் வைத்தியசாலை இன்றி பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகிறோம் என கவலை தெரிவிக்கின்றனர். 2010ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த அரச கட்டடம் இற்றை வரைக்கும் திறந்து பாவனையின்றி அப்பகுதி காடு மண்டிக் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மருத்துவ உபகரணங்கள் தளபாடங்கள் சேதமடைந்துள்ள நிலையில், பாழடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு மீள் குடியேற்றப்பட்ட இக்கிராமத்தில் சுமார் 1,400 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். இம்மக்கள், வைத்திய சேவையைப் பெற வேண்டுமாக இருந்தால் சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்திற்கு பயணிக்க வேண்டி உள்ளது.

கிண்ணியாதளவைத்தியசாலைக்குசெல்வதாக இருந்தால் பொது போக்குவரத்து இன்றி முச்சக்கர வண்டிக்கு 1,000 ரூபாவுக்கு மேல் கொடுத்தே செல்ல வேண்டியுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் மாதாந்த கிளினிக் செல்வதும் கடினமாகவுள்ளது.

இந்நிலையில், குறித்த அரச கட்டடம் கட்டப்பட்டும் பயன்படுத்த முடியாத நிலையில் பாழடைந்து காட்சியளிக்கிறது. இதனை சீர் செய்து மக்களுக்கான வைத்திய சேவையை பெற்றுத் தருமாறும் உரிய அதிகாரிகளுக்கு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# திறன்களை மேம்படுத்தும் செயற்றிட்ட நிகழ்வுகள்

## மட்டக்களப்பு மாவட்டத்தில்





சமாதானப் பேரவையினால் இலங்கையில் வன்முறை தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான சமூகமட்டக் குழுக்களின் திறன்களை மேம்படுத்தும் செயற்றிட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது . இந்நிகழ்வில் மாவட்ட மட்ட சர்வமதப் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மட்ட சர்வமதப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட தகவல் தொடர்பு பயிற்சி மையத்தின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரியும் வளவாளருமான பொன்.பேரின்பநாயகம் ஏற்பாட்டில் செயற்றிட்ட முகாமையாளர் நயாஜ் சம்சுதீன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இச்செயற்றிட்டம் ஐரோப்பிய யூனியனினால் இலங்கை, பங்களாதேஷ் நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், இலங்கையில் ஹெல்விடாஸ் ஸ்ரீலங்காவின் மேற்பார்வையின் கீழ் தேசிய சமாதானப் பேரவையினால் ஆறு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வடக்கில் சீனாவும் இந்தியாவும் அபிவிருத்திகளை வழங்க இடம்

## ஒத்துக்கொள்கிறார் வாசு



வடக்கில் சீனாவும் இந்தியாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வட பகுதி மக்கள் அதிக நன்மைகளை அடைவார்கள் என நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறிமாவோ பண்டாரநாயக்கா காலப்பகுதியில் இருந்து இலங்கை சீனாவுடனும், இந்தியாவுடனும் நெருக்கமான தொடர்புகளைப் பேணுகின்றது. அவருடைய காலப் பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்ட போது எமது நாடு நடுநிலையாக செயற்பட்டு இருந்தது. தற்போதும் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் முரண்பாடு நிலை காணப்படுகின்றது. அதனை நாம் ஜனாதிபதியுடன் பேசியே முடிவுகளை எடுத்து வருகின்றோம்.

நாம் எந்த நாடுகளுக்கும் எமது பகுதிகளை விற்கவில்லை. எந்த நாட்டுக்கும் சார்பாகச் செயற்படவும் இல்லை. இயற்கையான பகுதிகளில் அபிவிருத்தி செய்வதற்கு நாம் சில பகுதிகளை வழங்குகின்றோம். இதனால் எமது மக்களுக்கும் நன்மைகள் ஏற்படும். வடக்கில் இந்தியாவும், சீனாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வட பகுதி மக்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

காஸ் சிலிண்டர் பிரச்சினை தொடர்பில் நாம் பேசியிருக்கின்றோம். தேவையான காஸ் சிலிண்டர்கள் இருக்கின்ற போதும் அதில் பிரச்சினைகள் உள்ளன. அதனை பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பானதாக மக்களுக்கு வழங்க அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கை எடுப்போம்.

யுகதனவி ஒப்பந்த விவகாரம் தொடர்பில் நாம் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். அதற்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவுள்ளது. நாம் கூறியது போன்றே அது வரும் என நம்புகின்றோம். இந்த விடயத்தில் இரண்டு, மூன்று அணிகளாகச் செயற்படுவதைப் பார்க்கின்றோம். இருப்பினும் அரசாங்கம் என்ற வகையில் அது தொடர்பில் நாம் மீண்டும் கலந்துரையாடவுள்ளோம். – எனத் தெரிவித்தார்.

# மன்னாரில் வீதி நாடகம் ஊடாக கொவிட் விழிப்புணர்வு முன்னெடுப்பு

நாடளாவிய ரீதியில் கொரோனா அச்சுறுத்தல் காணப்படுகின்றமையால், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மன்னாரின் பல பாகங்களிலும் விழிப்புணர்வு வீதி நாடகம் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மன்னார் பஸ் தரிப்பிடத்தில், நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் குறித்த வீதி நாடகம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வேண்டுகோளுக்கு அமைவாக மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில், அதன் மாவட்ட இணைப்பாளர் ஏ.திலீபன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி வீதி நாடகத்தின் போது பார்வையாளர்களுக்கு முகக்கவசங்கள் அணிந்து கொள்வதன் முக்கியத்துவம், சமூக இடைவெளியைக் கடைப் பிடிப்பதன் அவசியம், கை கழுவுவதன் முக்கியத்துவம் மற்றும் கொரோனாத் தடுப்பூசியின் மூன்று டோஸ்களையும் பெற்றுக் கொள்வதற்கான அவசியம் தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்களும் வீதி நாடகத்தின் ஊடாக தெளிவுபடுத்தப்பட்டன. இந்த வீதி நாடகம் மன்னார் பஸ் நிலையம், வைத்தியசாலை மற்றும் பொது இடங்களில் இடம்பெற்றது.

பேசாலை மூவிராசாக்கள் பட்டினம் கலைப்பட்டறை கலைஞர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடக நிகழ்வில், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர், ஊடகவியலாளர்கள் மற்றும் மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழக மீனவர்கள் விவகாரம்; விரைவில் தீர்வு கிடைக்கும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



கிளிநொச்சி கிராஞ்சி கடல் பரப்பில் 14 இந்திய இழுவை படகுகள் தரித்து விடப்பட்டுள்ள நிலையில் அவற்றை அகற்ற விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் இந்திய இழுவைப்படகு விடயம் தொடர்பில் ஆராயப்பட்டபொழுதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா பேராறு நீர்த்தேக்கம் நீர்வழங்கல் அமைச்சரால் திறப்பு



வவுனியா நீர் வழங்கல் திட்டத்திற்கான குடிதண்ணீர் வழங்கலுக்காக சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் 140 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட பெற்ற பேராறு நீர்த்தேக்கத்தை நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைத்தார்.

இதன் போது நீர்த்தேக்கத்தைப் பார்வையிட்டமையுடன் இந்த நீர்த்தேக்கத்தின் ஊடாக குடிதண்ணீர் வழங்கும் செயற்பாடுகள் தொடர்பாகவும் பார்வையிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், கு.திலீபன் மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நீர்த்தேக்கம் 3.85 எம்சிஎம் நீர்க் கொள்ளளவை கொண்டதுடன், இந்த நீர்த்தேக்கம் மூலமாக 23 ஆயிரத்து 500 பயனாளிகள் பயனடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பூஸ்டர் தடுப்பூசி செலுத்தியோர் 20 லட்சத்தை தாண்டியது

இலங்கையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 லட்சத்தைக் கடந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 888 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 20 லட்சத்து 58 ஆயிரத்து 791 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் ஒரு கோடியே 59 லட்சத்து 64 ஆயிரத்து 289 பேருக்கு தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஒரு கோடியே 38 லட்சத்து மூவாயிரத்து 820 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் மொத்த சனத்தொகையில், 72.82 சதவீதமானோருக்கு முதலாம் தடுப்பூசியும் 63 சதவீதமானோருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் அரச உத்தியோகத்தர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் கொரோனாக் கொத்தணிகள் உருவாவதைத் தடுக்கும் முகமாக, அரச ஊழியர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களுக்கான கொரோனா பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று (வெள்ளிக்கிழமை) காலை தொடக்கம் மன்னார் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஜுலை, ஒகஸ்ட் மாதங்களில் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கு மேற்படி மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவை இணைந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை தொடக்கம் மன்னார் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் இராணுவத்தினர், விமானப்படையினர் மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அதிகளவானவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, தடுப்பூசிகள் பெற்று வந்தமையுடன் இந்த வாரம் முழுவதும் பூஸ்டர் தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.12.2021இல் வெளியிடப்பெற்றது.